பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 22 சனிக்கிழமை 07.12.2024 கதிர் 030

## இனி இது ரகசியம் அல்ல!

ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டம் நவம்பர் 30 திருகோணமலையில் நடைபெறுவதாக இருந்தது. பின்னர் அது திடீரென புயல் காரணமாக ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. புயல் ஆபத்து நீங்கிய ☞ 2

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச் சட்டம்

# இரண்டையும் நீக்குங்கள்

## சட்டத்தரணிகள் ஒன்றிணைவு கோரிக்கை

தேசியமக்கள்சக்திஅரசாங்கம்நிறைவேற்றதிகாரஜனாதிபதிமுறையையும்பயங்கரவாத தடைச்சட்டத்தையும் நீக்கவேண்டும் என சட்டத்தரணிகள்ஒன்றிணைவுவேண்டுகோள் விடுத்துள்ளது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறை காரணமாகசாத்தியமாகியுள்ளஏதேச்சதிகார ஆட்சியானது ஜனநாயகம் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறை உள்ளிட்ட நிறுவனங்களின் சுதந்திரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டமானது இலங்கையில் உள்ள பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பை கேலிக்கூத்தாக்கியுள்ளது, மேலும் சட்டபூர்வமான கருத்துச் சுதந்திரத்தை நசுக்குவதற்குத் தொடர்ச்சியானஆட்சியாளர்கள்தனிநபர்கள் குழுக்கள் நிறுவனங்களிற்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது என சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மக்களிற்குச் சாதாரணமாக வழங்கப்பட வேண்டிய மனித உரிமை பாதுகாப்புகளை முழுமையாக குறைமதிப்பிற்கு உட்படுத்தும் கொடூரமான விதிமுறைகளிற்காக பயங்கரவாதத் தடைச் சட்டம் ☞ 2



## தேசிய மக்கள் சக்தி ஏமாற்றிவிட்டது மக்கள் அதை விளங்கவேண்டும்

### ஹர்ஷ டி சில்வா சபையில் ஆவேசம்

தேசிய மக்கள் சக்தியின் ஆளும்தரப்பு மக்களை ஏமாற்றியுள்ளது. ஏமாற்றமடைந்ததை மக்களும் விளங்கிக் கொள்ளவேண்டும்என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கைமீதான விவாதத்தில்உரையாற்றுகையில் ☞ 8

## லொஹான் மீண்டும் கைது

பிணையில்விடுவிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நேற்றுமீண்டும்கைதுசெய்யப்பட்டுள்ளார். கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து இக்கைது இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் விபத்து ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் ☞ 8

## 75 ஆண்டுகால பயணத்தை திசை திருப்புவதே நோக்கம்

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு

கடந்த 75வருடங்களில்நாடுபயணித்த திசையை மாற்றி ஆய்வுகள், சான்றுகள் மற்றும்தரவுகளின்அடிப்படையில்நாட்டில் புதியதோர் மாற்றத்தை ஏற்படுத்துவதே ஆளும்தரப்பின் நோக்கமாகும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு மருத்துவ பீடத்தில் நேற்று தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற டிஜிட்டல் நூலக மாநாடு ☞ 2

## மின்சாரக் கட்டண திருத்தம் சமர்ப்பிப்பு

மின்சாரகட்டணதிருத்தம்தொடர்பான முன்மொழிவுகளை இலங்கை மின்சார சபை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் முன்வைத்துள்ளது.

அதற்கமைய, தற்போதுள்ள மின் கட்டணத்தை திருத்தம் செய்யாமல் எதிர்வரும் 6 மாதங்களுக்கு தொடர்சியாக பேணுவதற்கு, குறித்த முன்மொழிவில் இலங்கை மின்சார சபை ☞ 8

## நாணய நிதிய உடன்படிக்கையில் இனி ஒன்றும் செய்யவேமுடியாது

### ஒப்புக்கொண்டது ஆளும்தரப்பு

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மற்றும் கடன் மறுசீரமைப்பு விடயங்களில் இனிமேல் செய்வதற்கு ஒன்றும்இல்லைஎன்றுகைவிரித்துள்ளதுஆளும்தரப்பு

நாடாளுமன்றத்தில் நேற்று ஆளும்தரப்பினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால வாக்குப்பதிவு கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ☞ 8

## மக்கள் ஆணையை மீறி பெரும் துரோகமிழைப்பு

### எதிர்க் கட்சித் தலைவர் பாய்ச்சல்

மக்கள் ஆணையை மீறி மக்களுக்குத்துரோகம்இழைத்துள்ளது தேசிய மக்கள் சக்தி. ஏலவே எட்டியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை அவ்வாறேதொடர்வதானதுஅண்மைக் காலத்தில் நடந்த மிகப் பெரிய துரோகமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாசதெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் ஆளும்தரப்பால் முன்வைக்கப்பட்ட இடைக்கால வாக்குப்பதிவு கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆளும்தரப்பு பெரும் மக்கள் ஆணையைப்பெற்று, நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் இந்த ஆளும்தரப்பு மக்கள் ஆணையை மீறி மக்களின் உரிமைகளுக்குத் துரோகம் இழைத்துள்ளது.

ஏலவே எட்டியிருக்கும் சர்வதேச நாணயநிதியத்தின் இணக்கப்பாட்டை அவ்வாறே தொடர்வதானது அண்மைக் காலத்தில் நடந்த மிகப் பெரிய துரோகமாகும்.அதனால் இந்த இணக்கப்பாட்டில் ☞ 8

## நாணய நிதிய உடன்படிக்கைப்படி செயற்படாவிடின் நெருக்கடி வரும்

### ஆளும் தரப்பு சபையில் நியாயப்படுத்தல்

சர்வதேசநாணயநிதியத்துடன்ரணில்விக்கிரமசிங்க ஏற்கனவே எட்டிய இணக்கப்பாடுகளின்படி செயற்படாவிட்டால் பெரும் நெருக்கடிகளை இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ☞ 2

## நாடாளுமன்றத்தில் பெண்கள் நேற்று செம்மஞ்சள் சேலையில்

### பாலின வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பு

பாலினஅடிப்படையிலான வன்முறைக்கு எதிரான 16 நாள் உலகளாவிய செயல் முனைவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின்தலைமையில்பாராளுமன்றத்தில் நேற்று பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நாடாளுமன்றபெண் ☞ 8

## ரஷ்ய ராணுவத்தில் பிடிபட்டுள்ள தமிழர்களை மீட்டுத் தாருங்கள்

### சிறீதரன் எம்.பி. சபையில் கோரிக்கை

ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளவடக்கு தமிழ் இளைஞர்களை மீட்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளைமுன்னெடுக்குமாறுஇலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சிறிதரன் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் விஜித்தவுடன் அமெ. செயலாளர் சந்திப்பு

இலங்கைக்கு வருகை தந்திருக்கும், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங் களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர்டொனால்ட்லூ,அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்புக் குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள இலங் கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், இலங்கையின் மீட்புக்கு முக்கிய பங்காற்றிய யுஎஸ் எய்ட் மற்றும் அமெரிக்க திறைசேரி திணைக்களத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தி, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச்செயலாளர்டொனால்ட்லூ,இலங்கை யின் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்துடன் சந்திப்பை மேற்கொண்டார்.

இதன்போது, இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடினோம்.

இலங்கையின் மக்கள் நலனுக்காக பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை ஆதரிக்கத் தகுந்த திட்டங்கள், திறன் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் மூலம் நாம் இணைந்து செயல்படக்கூடிய வழிகளை இதன்போது ஆராய்ந்தோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சபாநாயகர் அஷோக ரன்வலவுடனான சந்திப்பின்போது இலங் கையின் முன்னுரிமைக்குரிய மறுசீரமைப்பு செயன்முறைகள் குறித்தும்,பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் சகலரையும் உள்ளடக்கிய ஆட்சிநிர்வாகம்என்பவற்றுக்கு மக்கள் அளித்திருக்கும் ஆணையை நிறைவேற்றுவதில் பாராளுமன்றம் கொண் டிருக்கும்மிகமுக்கியவகிபாகம்தொடர்பிலும் அமெரிக்க உயர்மட்டப்பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

மேலும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவைசந்தித்தஅவர்கள்,துடிப்பான ஜனநாயகத்தில் மாற்றுக்கருத்துக்களின் அவசியம் குறித்து வலியுறுத்தியதுடன், சகலரையும் உள்ளடக்கிய ஆட்சி நிர்வாகம், பொறுப்புக்கூறல் மற்றும் பொருளாதார சுபீட்சம் ஆகிய விடயங்களை மையப்படுத்தி பேச்சுவார்த்தை நடத்தினர்.

## இனி இது .....

பின்னர்ஒத்திவைக்கப்படுவதாகஅறிவிக்கப்பட்ட அந்தக் கூட்டம் இன்று வவுனியாவில் பகல் 11 மணிக்குக் கூட்டப்படுகின்றது.

இன்றைய கூட்டம் குழப்பத்தில் முடிவதற்கான வாய்ப்-புக்கள் அதிகம் இருப்பதாகக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. இந்தக் கூட்டத்திற்கு கட்டாயம் அழைக்கப்பட்டிருக்கவேண்டிய கட்சியின் நிர்வாகச் செயலாளர் விந்தன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ஆகியோருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. அவர்கள் இருவரும் கட்சியின் தோற்றுப்போன தலைமைக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர்கள் என்பதுதான் அதற்குக் காரணம்.

விந்தனைக் கட்சியில் இருந்து நீக்குவது என்பதும் இன்றைய கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ள விடயம். கட்சியின் பொருளாளரான சுரேன் குருசாமியினால் கடந்த தலைமைக் குழுக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட இதுதொடர்பானபிரேரணைஎதிர்ப்புக் காரணமாக நிறைவேற்றப்படமுடியாமல் போனது. அதனால் இன்றைய கூட்டத்திற்கு தமக்கு ஆதரவானவர்களை வருகை தரவைத்து அந்தத் தீர்மானத்தை எப்படியாவது நிறைவேற்ற கட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்காகவேவிந்தனுக்கும்வினோவிற்கும் கூட்டத்திற்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. கட்சியின் யாப்புப்படி கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தலைமைக் குழுவிற்கு இல்லை.

தலைமைக் குழு

(அ) இக்குழுவில் தலைவர், செயலாளர் நாயகம், உப தலைவர், தேசிய அமைப்பாளர், நிதிச் செயலாளர், நிர்வாகச் செயலாளர், இளைஞர் அணிச் செயலாளர், ஆகியோருடன் வெளிநாட்டுக் கிளைகளினால் முன்மொழியப்படும் நால்வரும் பொதுக் குழுவினால் தலைமைக் குழுவிற்குத் தெரிவு செய்யப்படும் பத்து உறுப்பினர்களுமாக மொத்தம் 21 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர்.

(ஆ) இக்குழுவிற்கு ஸ்தாபனம் மற்றும் அரசியல் சம்பந்தமான அவசர, அவசிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் உண்டு.

(இ) கட்சிக்கான தலைமை இக் குழுவின் கூட்டுப் பொறுப்பில் இருக்கும்.

(ஈ) இக் குழு குறைந்தது 2 மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டப்படவேண்டும்.

என்றுதான் யாப்பில் தலைமைக்குழுவின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் யாப்புக்கு எதிராக கட்சியின் நிர்வாகச் செயலாளரான விந்தன் கூட்டத்திற்கு அழைக்கப்படாதது மட்டுமின்றி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து, எந்தவித விசாரணைகளும் விளக்கம் கோரல்களும் இன்றி அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கும் இன்றைய தலைமைக்குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடமொதுக்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்தும் கட்சியில் தமக்குள்ள உரிமையை உறுதிப்படுத்தவும் விந்தனும் வினோவும் இன்றைய கூட்டத்திற்குச் செல்வது என்று முடிவெடுத்துள்ளனர். இதையடுத்து ரெலோவின் வவுனியா அலுவலகத்தில் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தலைமைக்குழுக்கூட்டம்நேற்றுமுன்னிரவில் திடீரென வவுனியா நெல்லி ஸ்டார் ஹோட்டலுக்கு மாற்றப்பட்டது.

ரெலோ அலுவலகத்தில் கூட்டம் நடத்தப்பட்டால் விந்தன், வினோ ஆகியோர் கூட்டத்திற்கு வருகை தருவதைத் தடுத்து நிறுத்துவது பெரும் பிரச்சினையாகிவிடும் உறுப்பினர்களிடையே மோதலுக்கு வழிவகுத்துவிடும்என்றஅச்சம்காரணமாகவே கூட்டம் கடைசி நேரத்தில் இடம்மாற்றப்பட்டது என்று கூறப்படுகின்றது.

நெல்லி ஸ்டார் விடுதியில் கூட்டத்திற்கு வருபவர்களின் பெயர் விவரங்கள் வழங்கப்பட்டு அவர்களை மட்டுமே கூட்ட மண்டபத்திற்குள் விடும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் –

அதையும் மீறி யாராவது கூட்டம் நடக்கும் இடத்திற்குள் நுழைய முயன்றால் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் உயிருக்கு ஆபத்து விளைவித்தார்கள் என்று காரணம் காட்டி துப்பாக்கிச் சூடு நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் –

நேற்றிரவு முழுவதும் ரெலோ உறுப்பினர்களிடையே பரபரப்பான வதந்தி பரவி வந்தது. இதனால் உறுப்பினர்கள் பலரும் கொதிப்படைந்திருந்தனர். நியாயம் கேட்பதற்காக அவர்களும் வவுனியாவிற்குப் புறப்படுவதற்குத் தயாராகினர் என்று அறியவந்தது.

தலைமைக் குழுவின் இந்தக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியுடன் மீண்டும் சேர்ந்து தேர்தல்களைச் சந்திப்பது குறித்தும் படுதோல்வியுற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணிக்கட்சிகளுடன்தொடர்ந்தும் சேர்ந்தியங்குவது தேவையா என்பது குறித்தும் ஆராயப்பட இருப்பதாகவும் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தேர்தலில் ரெலோவிற்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு யார் காரணம், அதற்கான பொறுப்புக் கூறல் என்ன என்பது தொடர்பில் எதுவும் ஆராயப்படுவதாக இல்லை.

இவைதொடர்பில்விரிவாகஆராய்வதற்காக கட்சியின் பொதுக் குழு அல்லது மத்திய குழுவைக் கூட்டும்படி உறுப்பினர்கள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வரும் நிலையிலும் செயலாளரான ஜனா அந்தக் கூட்டத்தைக் கூட்ட மறுத்து வருகின்றார். அந்தக் குழுக்களில் தலைமைக்கு ஆதரவு கிடைக்காது என்பதாலேயே அவற்றைக் கூட்டப் பின்னடிக்கிறார்கள்.

கட்சியின் யாப்புப்படி அனைத்து அதிகாரங்களும் பொதுக் குழுவிற்கே உள்ளது. தலைமைக் குழுவின் முடிவுகளை மீள்பரிசீலனை செய்யும் அதிகாரமும் பொதுக் குழுவிற்கே உள்ளது. ஆனாலும் அந்தக் குழுவைக் கூட்டுவதற்கு தலைவரும் செயலாளரும் மறுப்புத் தெரிவித்து, தமது எதிராளிகளை தலைமைக் குழுவின் மூலமே கட்சியைவிட்டு வெளியேற்றிவிட முயற்சிக்கிறார்கள் என்பதே ரெலோ உறுப்பி னர்களின் கொந்தளிப்புக்குக் காரணம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## இரண்டையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்போயுள்ளது எனவும் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் கூட்டிணைவு, பயங்கரவாதம் பற்றிய தெளிவற்ற மற்றும் பரந்துபட்ட வரையறையின் அடிப்படையில் கைது செய்வதற்கும் காவலில் வைப்பதற்குமான வரைமுறையற்ற அதிகாரங்களை இந்தச் சட்டம் வழங்குகின்றது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான அதிகாரங்கள் நீதி ஆய்விற்கு உட்படுத்தப்படுவதில்லை, மேலும் இது பரந்துபட்ட அசாதாரண ஜனாதிபதி அதிகாரங்களையும் வழங்குகின்றது என தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் அமைப்பு பயங்கரவாததடைச்சட்டத்தைநீக்குவதுமனித உரிமைகளிற்கு மாத்திரமின்றி நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கும் அவசியமானது என தெரிவித்துள்ளது.

## நாணய நிதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சியினர் மாறுப்பட்ட கருத்துக்களைக் குறிப்பிடுகின்றனர். கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், தேர்தலுக்கு பின்னரும் நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருசில இணக்கப்பாடுகள்மறுசீரமைக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இன்றும் உறுதியாக உள்ளோம். 2022ஆம்ஆண்டுகாலப்பகுதியில் நாட்டைவங்குரோத்துநிலைக்குதள்ளியவர்கள் இன்று பொருளாதார நெருக்கடி, சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகள் குறித்து கேள்வியெழுப்புகிறார்கள்.

முன்னாள்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே நாணய நிதியத்துடனான செயற்திட்டங்களுக்கு முழு இணக்கம் தெரிவித்துள்ளார். ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய செயற்படாவிடின் பெரும் நெருக்கடிகள் ஏற்படும்.

இணக்கப்பாடுகளில்இருந்துவிலகிசர்வதேச மட்டத்தில் நெருக்கடிகளை ஏற்படுத்தவே எதிர்க்கட்சியினர் முயற்சிக்கிறார்கள். நாடுஎன்ற ரீதியில் சர்வதேச தரப்புடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நிலை காணப்படுகிறது

சந்தையில் அரிசி, தேங்காய் உட்பட அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இதற்கு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன.

நாளாந்தம் 6500 மெற்றிக் தொன் அரிசிக்கான தேவை காணப்படுகிறது. அரிசி உற்பத்தியைக் காட்டிலும் நுகர்வு அதிகளவில் காணப்படுகிறது. அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காண்பது குறித்து பிரதான மற்றும் நடுத்தர அரிசி ஆலை உற்பத்தியாளர்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம்.

குறுகிய கால திட்ட அடிப்படையில் 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சந்தைக்கு அரிசி விநியோகிக்க பிரதான அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதற்கமைய நாளாந்தம் 1 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படுகிறது.

பிரதான அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் அரச வங்கிகளிடமிருந்து 15 பில்லியன் ரூபா வரை கடன் பெற்றுள்ளார்கள். சந்தைக்கு முறையாக அரிசி விநியோகிக்கப்படவேண்டும் இல்லையேல் இனி கடன் வழங்கப்படமாட்டாது என்பதை அறிவித்துள்ளோம் என்றார்.

## 75 ஆண்டுகால ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2024 இல் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக முதலீடு செய்வதை நாங்கள் மிகவும் முக்கியமானதாக கருதுகிறோம். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்வது அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இன்றியமையாதது என்று நாங்கள் நம்புகிறோம். கடந்த 75 வருடங்களில் நாடு பயணித்த அதே திசையில் அல்லாமல், நாட்டை புதிய பாதையில் இட்டுச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இது ஆராய்ச்சி, சான்றுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாக நாம் எதிர்கொண்டுள்ள பாரிய பிரச்சினை, குறிப்பாக உயர் மட்டங்களில் முடிவெடுப்பதில், விஞ்ஞானபூர்வஅடிப்படையில்,ஆதாரங்களின் அடிப்படையில், தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்காமல் இருப்பதாகும். இது மாற்றப்பட வேண்டிய ஒன்று. எனவே, முடிவெடுக்கும் செயன்முறையும் ஆராய்ச்சி சமூகமும் மிகவும் நெருக்கமாக இணைந்து செயற்பட வேண்டும்.

முடிவெடுக்கும் செயன்முறை மட்டுமன்றி, திறன் கொண்ட கொண்ட நாடாக நாம் முன்னேற, புத்தாக்கம், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களில் முதலீடு செய்ய வேண்டும்.

மேலும் நாட்டிற்கு பலமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறை தேவை. இதுவரையில், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையில் முதலீடு மிகக் குறைந்த அளவிலேயே இருந்து வந்துள்ளது, படிப்படியாக அதை மாற்றுவோம் என்று நம்புகிறோம்.

உற்பத்தி, புத்தாக்கம் போன்றே குறிப்பாக அளவு, தரம் மற்றும் தரநியமங்கள் ஆகியவற்றிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் பேராசிரியர் சமன் செனவீர, பணிப்பாளர் நாயகம் கலாநிதி சேபாலிகா சுதசிங்க, தேசிய விஞ்ஞான நூலக வள நிலையத்தின் தலைவர் மஞ்சுள கருணாரத்னஉட்படஆய்வாளர்கள்,நூலகர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ரஷ்ய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று சபையில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன் றத்தில் நேற்றையதினம் ஒழுங்குப்பிரச் சினையொன்றை எழுப்பிய அவர், மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

சுயனிகாந்த் பகீரதன், அதிஸ்டராஜா கோமஸ்மிதுர்ஷன்,ஸ்டீபன்சிவேஸ்ஆகியோர் கீதபொன்கலன் பிரபாத், சுந்தரலிங்கம் பாலச்சந்திரன் ஆகியோர் பிரான்ஸ், பெல்ஜியம், ஜேர்மன் ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்காக செப்டெம்பர் 6 முகவர்களால் அழைத்துச்செல்லப்பட்டுரஷ்யஇராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களை மீட்பதற்கு ஆளும்தரப்பு உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றார்.

இந்தவிடயத்தைவெளிவிவகாரஅமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகவும் அவர்கள் ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் என்றும் சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சிங்களம் சித்தியடைந்தோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள்

(சர்ஜுன், அஷ்ரப்கான்)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் ஓ.என்.யு.ஆர். நிறுவனத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி பங்களிப்பின் கீழ் நடத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கான 100 மணித்தியாலம் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் செயலக கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் கலந்து கொண்டு இரண்டாம்மொழிசித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

மேலும்இந்நிகழ்வில்கௌரவ அதிதிகளாக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம். அஸ்லம், விசேட அதிதிகளாக சிங்களபாடநெறிவளவாளர்களானமாவட்ட உளவள துனை உதவியாளர் ஏ.மனூரஸ், ஏ.பி ஆரிபின்,கலாசார உத்தியோகத்தர்





ரஸ்மி எம் மூஸா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வு தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர் எம் ஏ.எம் வாஜீத் அலியின் ஒருங்கிணைப்பின் கீழ் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடி வைத்தியர் சில்மி பாரூக் காலமானார்

(அபு அலா)



காத்தாங்குடியைச் சேர்ந்த யுனானிவைத்தியர்சில்மிபாரூக் வியாழக்கிழமை இந்தியாவில் காலமானார்.

காத்தான்குடி ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் கடமை யாற்றியஅவர்,தனதுமேற்படிப்பை மேற்கொள்வதற்காக இந்தியாவுக்குச்சென்றிருந்தார். இந்நிலைமையிலேயே அவர் அங்கு காலமானார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பப் பெண் சடலமாக மீட்பு

## கிளிநொச்சியில் துயரம்



தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட புன்னைநீராவி நாதன் திட்ட கிராமத்தில் 35 வதுடைய மூன்று பிள்ளைகளின் தாயார் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் வியாழக் கிழமை மாலை இடம்பெற் றுள்ளது. மேற்படி சம்பவத்தில் கொலை என சந்தேகித்த பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் அவருடைய 14 வயது மகனைக் கைது செய்துள்ளனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைசட்டவைத்திய அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டதுடன்கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் இஸ்மாத் ஜெமில் சம்பவ இடத்திற்கு வந்து சடலத்தை பார்வையிட்டார்.

சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (113)



# காரைதீவு தண்ணீர் தட்டுப்பாட்டை தீர்க்க இராணுவத்தினர் ஏற்பாடு

(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட காரைதீவு பிரதேசத்திற்கு இராணுவத்தினர் வவுஸர் மூலம் குடிநீர் வழங்கி வருகின்றனர்.

கடந்த பத்து நாள்களாக ஆலயங்கள், பிரதேச சபை, பொது அமைப்புகள், தனியார் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் வழங்கி வந்தன.

தற்போது இராணுவத்தினரும் இப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.





# கிளிநொச்சி மாபெரும் தொழிற்சந்தை மற்றும் தொழிற் பயிற்சி வழிகாட்டல்



கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் இணைந்து நடத்தும் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலக வளாகத்தில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன் அவர்கள் விருந்தினராக கலந்து கொண்டு, தொழிற்சந்தை நிகழ்வினை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) ந.இன்பராஜ், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ந.சந்தீபன், றகமா நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் இரா.சஞ்ஜெய்காந்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த தொழிற்சந்தையில் 40 இற்கும் மேற்பட்ட அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களும்



கலந்துகொண்டு தொழில் வாய்ப்பை வழங்கி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் தேடும் இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதை குறித்த வளாகத்தில் அவதானிக்க முடிகிறது.

குறித்த நிகழ்வு மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் இருக்கின்ற வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறைகளில் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக குறித்த தொழிற் சந்தை நடத்தப்படுகிறது.

அந்த வகையில் மாவட்ட மட்டத்தில் உள்ள தொழில் வழங்கும் தனியார் நிறுவனங்களை அழைத்து, தொழில் தேடுபவர்களையும் தொழில் வழங்குநர்களையும் இணைத்து தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட செயலக மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் சி.சிவசொரூபன், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில் துறையை எதிர்பார்ப்பவர்கள், தொழிற் பயிற்சி பெறுநர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். 316

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஏமாற்றம்

பன்னாட்டு நாணய நிதியத்தின் உடன்படிக்கை விடயத்தில் மக்களுக்கு வாக்குறுதியளித்தபடி எதனையும் செய்யமுடியவில்லை என்பதை தேசிய மக்கள் சக்தி ஒருவழியாக நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொண்டுவிட்டது. நாணய நிதியத்துடனான ஒப்பந்தம்மற்றும்கடன்மறுசீரமைப்புஉடன்படிக்கைஎன்பன ஏற்கனவே இறுதிசெய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் அவற்றிலிருந்து விலகுவது இனி பெரும் பாதிப்புக்களைக் கொண்டு வரும் என்பதால் அவற்றை அப்படியே தொடர்வது என்கிற முடிவுக்கு தேசிய மக்கள் சக்தி வந்திருப்பது தெளிவாகியிருக்கின்றது.

பொதுத் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதிக்கு இது முற்றிலும் முரணானது என்று எதிர்க்கட்சிகள் இப்போது கடுமையாக விமர்சிக்கத் தொடங்கியுள்ளன. இது மக்களுக்குச் செய்த துரோகம் என்று கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி எதிர்க் கட்சித் தலைவர் நேற்று நாடாளுமன்றத்தில் கண்டித்துள்ளார். தாம் பதவிக்கு வந்தால் நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்து இலங்கயை ன் பொருளாதார நெருக்கடிச் சுமைகளை மக்கள் மீது ஏற்றுவதை நிறுத்துவோம் என்று தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்திருந்தது. அந்த வாக்குறுதியை மீறி ஆளும்தரப்பு இப்போது செயற்படுகின்றது என்பதே தற்போதைய கடுமையான விமர்சனங்களுக்குக் காரணம்.

தேசிய மக்கள் சக்தி மட்டுமல்ல ஐக்கிய மக்கள் சக்தியும் இதே வாக்குறுதியை தேர்தலின்போது மக்களுக்கு வழங்கியது. நாணய நிதியத்துடனான உடன்படிக்கைமறுசீரமைக்கப்பட்டுவரிகள்குறைக்கப்படும், வேறுவழிகளில் நாட்டின் வருமானத்தை உயர்த்தி விலை வாசி குறைக்கப்படும் என்று தெரிவித்திருந்தது. தேசிய மக்கள் சக்தியை ஆட்சியில் அமர்த்திய மக்களும் அதே எதிர்பார்ப்புடன்தான் வாக்களித்தார்கள். வரிகள் –குறைக்கப்படுவதன் மூலம் தாம் தாங்க முடியாது தவிக்கும் வாழ்க்கைச் செலவிலிருந்து விடுபட முடியும் என்று அவர்கள் எண்ணினார்கள். இப்போது அந்த எண்ணத்தில் இடிவிழுந்துள்ளது என்பதை ஏற்றுத்தானாகவேண்டும்.

நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன, அதன் விளைவுகளை புதிய ஆளும் தரப்பின் வரவு செலவுத் திட்ட அறிக்கை முன்வைக்கப்படும்போது உணராலம் என்றும் ஆளும் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் உண்மை நிலவரத்தின்படி அத்தகைய விளைவுகள் மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு இருக்கப்போவதில்லை என்பதை ஆளும் தரப்பினரின் தற்போதைய கருத்துக்களில் இருந்து உய்த்துணர முடிகின்றது. நாணய நிதியத்துடனான உடன்படிக்கை மறுசீரமைப்புச் செய்யப்படாத வரையில் மக்கள் எதிர்பார்க்குமளவிற்கு வரிகள் குறையப் போவதில்லை என்பது வெளிப்படை உண்மை. வரிகள் குறையவில்லைஎன்றால்வாழ்க்கைச் செலவு குறையப்போவதில்லை. பொருளாதாரச் சுமை மக்கள் முதுகிலிருந்து இறங்கப்போவதில்லை. அரசியல்வாதிகள்அனைவரதுஒட்டுமொத்தப்பாவத்தையும் மக்களே தொடர்ந்தும் சுமக்க வேண்டியவர்களாக இருக்கப்போகின்றார்கள்.

வருமானஅதிகரிப்பின்மைமற்றும்வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு ஆகிய இரட்டைக் குழல் துப்பாக்கிகளின் பிடியிலிருந்து இப்போதைக்கு மக்களுக்கு விடிவில்லை என்பதே நிதர்சமாக உள்ளது.



JVP Founder Leader Rohana Wijeweera · NPP Leader Anura Kumara Dissanayake · Somawansa Amarasinghe

# ஜேவிபிக்கும் இந்தியாவிற்குமான வரலாற்றுத் தொடர்பின் வகிபாகம்

உபுல் யோசப் பெரனான்டோ

பிரேமதாச ஆட்சியில் ஜேவிபி கடுமையாக ஒடுக்கப்பட்டது. அந்தக் காலத்தில், ஜேவிபியின் பெரும்பாலான அரசியல் குழு உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். ஆளும்தரப்பின் இந்தத் தீவிர தாக்குதலில்இருந்துதப்பியஒரேநபர்இலங்கையை விட்டு வெளியேறிய சோமவன்ச அமரசிங்க மட்டுமே. அவர் ஆரம்பத்தில் இந்தியாவில் தஞ்சம் அடைந்தார், பின்னர் தாய்லாந்திற்கும், இறுதியில் ஐரோப்பாவிற்கும் சென்றார். அங்கு அவர் அரசியல் தஞ்சம் பெற்றார். புலம்பெயர்ந்திருந்த ஜேவிபியினரை மீண்டும் உயிர்ப்பிக்கவும், மறைந்திருந்த பிராந்தியத் தலைவர்களுடன் மீண்டும் தொடர்பு கொள்ளவும், அமைப்பைச் செயல்படும் அரசியல் கட்சியாக மாற்றவும் சோமவன்ச முக்கிய பங்காற்றினார்.

பலவருடகாலபுலம்பெயர்வின்பின்னர்2001இல் சோமவன்ச இலங்கைக்குத் திரும்பினார். தேர்தல் பேரணியில் உரையாற்றிய அவர், தனது உயிரை இந்தியாகாப்பாற்றியதைஒப்புக்கொண்டார். அவரது உரையின் சில பகுதிகளை இந்திய ஊடகங்கள் வெளியிட்டன, தான் தேவைப்படும் நேரத்தில் இந்தியாவிடமிருந்து ஆதரவைப் பெற்றதற்கு சோமவன்ச நன்றி தெரிவித்தார் என்பது அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது,

‘ஐரோப்பாவில் 12 ஆண்டுகால அஞ்ஞான வாசத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய ஒரு முக்கிய இலங்கை மார்க்சிஸ்ட் தலைவர், 1987 – –89இல் அரசுக்கு எதிரான தனது கட்சியின் இரண்டாவது கிளர்ச்சியின் மீதான அரச ஒடுக்குமுறையிலிருந்து தப்பிக்க இந்தியா உதவியதாகக் கூறினார்.

ஜனதா விமுக்தி பெரமுனா அல்லது மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழுவில் எஞ்சியிருக்கும் ஒரேயொரு உறுப்பினரான சோமவன்ச அமரசிங்கவே அவர். இலங்கை பல கொலைகளைக் கண்ட ஒரு சகாப்தத்தில் அடக்குமுறையிலிருந்து தப்பிப்பிழைக்க உதவிய இந்தியாவிற்கும்முன்னாள்பிரதமர்வி.பி.சிங்கிற்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

நாடுதிரும்பிஒருநாள்கழித்துவெள்ளிக்கிழமை இரவுகொழும்பிற்குவெளியேகளுத்துறையில்தனது முதல் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜேவிபி தலைவர், அக்கட்சியின் நன்கறியப்பட்ட இந்திய –விரோதக் கொள்கையைக் கைவிட்டதற்கான அறிகுறிகளைக் காட்டினார்.

அவர்தப்பிக்கஉதவியஇந்தியமக்களுக்கும்,விபி சிங் மற்றும் இந்திய அதிகாரிகளுக்கும் அவர் நன்றி செலுத்தினார். பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இத்தாலி உட்பட அவருக்கு அடைக்கலம் கொடுத்த பல நாடுகளுக்கும் அவரது நன்றி பகிரப்பட்டதாக இலங்கை நாளிதழ் சனிக்கிழமைசெய்தி வெளியிட்டன. 58 வயதான அமரசிங்க, டிசெம்பர் 5 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னராக ஜேவிபிக்கு ஆதரவாகப் பரப்புரை செய்வதற்காக இலங்கைக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டார்” என்று ’டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நவம்பர் 24, 2001 அன்று செய்தி வெளியிட்டிருந்தது.

சோமவன்சவின் அறிக்கையின் போது, இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பல அமைச்சரவை அமைச்சர்கள் ஜேவிபியின் நாடாளுமன்றஉறுப்பினர்களாக இருந்தனர். அநுர இறுதியில் சோமவன்சவுக்குப் பின் ஜேவிபியின் தலைவராகப்பதவியேற்றார், கட்சியைத் தொடர்ந்து கட்டியெழுப்பினார்.

ஜனவரி 2024இல், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அனுரகுமார இந்தியாவுக்குச் சென்றார். அனுரவின் அரசியல் பயணமும் இறுதியில் ஜனாதிபதி பதவியும் இந்திய பயணத்தின் மூலம் மறைமுகமாக தாக்கத்தை ஏற்படுத்தியதால் இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிக்கிறது.

சோமவன்சவின் பிழைப்பு மற்றும் ஜேவிபியை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் கட்சியின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தன, இறுதியில் அநுரகுமாரவின் ஜனாதிபதி பதவிக்கும் அது வழிவகுத்தது. 1989 நவம்பரில் சோமவன்ச இந்தியாவில்உயிர்பிழைத்திருந்தனர்,தற்போதைய ஜனாதிபதி அனுராவை இந்தியாவிற்கு வரும்படி கோரும் அழைப்பும் நவம்பரில் வந்தது. ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் ஜேவிபியின் மீள் எழுச்சியில் இந்தியா கொண்டிருக்கும் வரலாற்றுத் தொடர்பைப் பற்றிச் சிந்திக்கவும், ஆராயவும் ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்டிருக்கும் இந்தியப் பயணத்திற்கான அழைப்பு வாய்ப்பை வழங்கியிருக்கின்றது.

ஜேவிபியை புத்துயிர் பெற உதவிய தனது தலைவர் சோமவன்சவை இந்தியா பாதுகாத்ததற்காகஅந்தநாட்டுக்குஅனுரஎவ்வளவு தூரம் நன்றியுள்ளவராக இருக்கிறார் என்று உறுதியாகக் கூறமுடியாது. ரணில் அண்மையில் இந்தியாவுக்குச்சென்றுமோடியுடன்கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளைஅனுரஅமுல்படுத்தவேண்டும் என்றார். இதற்கான அநுரவின் பதில் அவரது பயணத்தின்போது டெல்லியில் வெளியாகும்.



# எருமைகள் மீது மோதிய மோட்டார் சைக்கிள்கள்

## ஒரு மாடு சாவு; 5 பேர் காயம்

கல்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாசிக்குடா பிரதான வீதியில் வியாழக்கிழமை இரவு பயணித்த 3 மோட்டார் சைக்கிள்கள் வீதியில் நின்ற எருமை மாடுகள் மீது மோதியதில் 5 இளைஞர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதோடு, எருமை மாடொன்று உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -



ஐந்து பேர் பயணித்த மூன்று மோட்டார் சைக்கிள்களும் அதிவேகமாக சென்று, வீதியில் நின்ற எருமை மாடுகளின் மீது மோதியுள்ளன.

இதில், ஓர் எருமை மாடு உயிரிழந்துள்ளதுடன், நான்கு எருமை மாடுகள் காயமடைந்துள்ளன.

மோட்டார் சைக்கிள்கிளில் பயணித்த ஐந்து இளைஞர்களும் காயங்களுக்குள்ளான நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் கல்குடா பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# அமைச்சர் விஜித்த ஹேரத்தை சந்தித்தார் அமெரிக்க உதவிச் செயலர் டொனால்ட் லூ

தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.



இந்த சந்திப்புக் குறித்து தனது எக்ஸ் பக்கதில் பதிவிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத்துதுவர் ஜூலி சங் -

இலங்கையின் மீட்புக்கு முக்கிய பங்காற்றிய யுஎஸ்எயிட் மற்றும் அமெரிக்க திறைசேரி திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்துடன் சந்திப்பை மேற்கொண்டார்.

இதன்போது, இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் பொதுவான முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடினோம். மேலும், இலங்கையின் மக்கள் நலனுக்காக பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை ஆதரிக்கத் தகுந்த திட்டங்கள், திறன் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் மூலம் நாம் இணைந்து செயல்படக்கூடிய வழிகளை இதன்போது ஆராய்ந்தோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.





காலைக்கதிர் Kalaikkathir

# ஸ்பெயின் நாட்டுப் பெண் சுற்றுலாவியைத் தாக்கி கைப்பேசியை பறித்த இருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி சென்ற உடரட்ட மெனிக்கே ரயிலில் பயணித்துக்கொண்டிருந்த வெளிநாட்டுப் பெண்ணொருவரை தடியால் தாக்கிவிட்டு, அவரது கையடக்கத் தொலைபேசியை பறித்ததாக கூறப்படும் இருவர் வட்டவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர், இரு சந்தேக நபர்களும் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை முற்படுத்தப்பட்டபோது இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொசல்ல மற்றும் விக்டன் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 26 வயதுகளை உடைய இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை கொழும்பு கோட்டையில் இருந்து எல்ல நோக்கி ரயிலில் பயணித்துக்கொண்டிருந்த 36 வயதான ஸ்பெயின் நாட்டுப் பெண் சுற்றுலாப் பயணி, ரயில் கதவுப் பகுதியில் நின்றவாறு தனது கையடக்கத் தொலைபேசி மூலம் வீடியோ எடுத்துக்கொண்டே பயணித்துள்ளார்.

இதன்போது ரயில் பாதைக்கு அருகில், வீதியில் நின்ற இரு இளைஞர்கள் தனது கையை தடியால் தாக்கிளர் எனவும், இதன் காரணமாக 5 லட்சம் ரூபா பெறுமதியான தனது கையடக்கத் தொலைபேசி கீழே விழுந்ததாகவும், தடியில் அடித்தபோது தனது தலைபகுதியில் காயம் ஏற்பட்டதாகவும் அப்பெண் எல்ல சுற்றுலா பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார்.

ஹற்றனுக்கும் வட்டவளைக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக வட்டவளை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார், சம்பவ தினத்தன்று இரவு சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

இந்நிலையில், வியாழக்கிழமை வட்டவளை பொலிஸ் நிலையத்துக்கு சென்று தனது கையடக்கத் தொலைபேசியை பாதிக்கப்பட்ட பெண் பெற்றுக்கொண்டார்.

# யாழ். குடாநாட்டில் இளைஞர் கைது

## திருட்டுக் குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணத்தில் வீடொன்றின் கூரையை பிரித்து உள்நுழைந்து நகைகளை திருடிய குற்றச்சாட்டில் 20 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

ஏழாலை தெற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் வசித்தவர்கள் வெளியில் சென்றுவிட்ட பின்னர், வீட்டின் கூரை ஓடுகளை அகற்றி, உள்நுழைந்த திருடன் வீட்டிலிருந்த தங்க நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பில் வீட்டாரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அப்பகுதியை சேர்ந்த 20 வயதுடைய இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், திருடிய நகைகளை இளைஞனிடம் இருந்து மீட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, இளைஞனை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மாளிகைக்காடு ஜும்மா பள்ளியில் துஆ பிராத்தனை உயிர்களை காக்க போராடியோருக்கு கௌரவிப்பும்





மாளிகைக்காடு வாழ் பொதுமக்கள் சார்பில் மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் கடந்த 2024 நவம்பர் 26 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக ஐந்து நாள்கள் மாவடிப்பள்ளி காரைதீவு பிரதேச வெள்ளத்தில் சிக்கிய உயிர்களை காப்பாற்ற மீட்பு பணியில் ஈடுபட்டவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், விசேட துஆ பிராத்தனையும் ஜும்ஆ பள்ளிவாசல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமரின் நெறிப்படுத்தலில் பதில் தலைவர் ஏ.எம். ஜாஹீரின் தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஜும்ஆ தொழுகையை தொடர்ந்து இடம்பெற்றது.

தொடர்ச்சியாக ஐந்து நாள்கள் மாவடிப்பள்ளி காரைதீவு பிரதேச வெள்ளத்தில் சிக்கிய உயிர்களைக் காப்பாற்ற மீட்பு பணியில் ஈடுபட்டு நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி ஐந்து மாணவர்களை உயிருடனும், நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி 06 மாணவர்கள் அடங்களாக 08 பேரின் ஜனாஸாக்களை மீட்கவும் இயற்கை சீற்றங்கள் உட்பட பல்வேறு பிரச்சினைகளை சகித்துக் கொண்டு களப்பணி செய்த மட்டுப்படுத்தப்பட்ட கல்முனை ஆழ்கடல் சுழியோடிகள் நீரியல் வள மீனவர் கூட்டுறவு சங்கம், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு, சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை, காரைதீவு இராவணா அமைப்பு போன்றன இதன்போது கௌரவிக்கப்பட்டன.

இன்று அனர்த்தம் மற்றும் சமூக சேவைகள் தொடர்பில் ஜும்ஆ உரை நிகழ்த்தியதுடன் ஜும்ஆ தொழுகையை தொடர்ந்து விசேட துஆ பிரார்த்தனையை இப்பள்ளிவாசலின் தலைமை இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ் (உஸ்மானி) நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கிராம உத்தியோகத்தர் ஏ.எம். நஜீம், நம்பிக்கையளர் சபை ஆலோசகர் ஐ. இஸ்திகார், பொருளாளர் எம்.எச்.எம். றிபாஸ் உள்ளடங்களாக நம்பிக்கையளர் சபையினர், ஜமாஅத்தார் என பலரும் கலந்து கொண்டனர்.







# தெல்லிப்பழை சிவஸ்ரீ விஸ்வநாத ஐயர் மறைவு இந்து உலகுக்குப் பேரிழப்பே

## சர்வதேச இந்துமத பீடம் அனுதாபம்



இந்திய பாரம்பரியத்தை கொண்டவரும் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவருமான சிவஸ்ரீ விஸ்வநாதஐயரின் (நாராயண வாத்தியார்) மறைவு முழு இந்து உலகுக்கும் பேரிழப்பு என சர்வதேச இந்து மத பீட செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா தனது அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அனுதாப செய்தியில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

இலங்கையில் நடைபெறுகிற பெரும்பாலான கும்பாபிஷேகங்களை தலைமையேற்று நடத்தியவர். அதேவேளை தெல்லிப்பழை வேதாகம பாடசாலையை நிறுவி தங்கம்மா அப்புக்குட்டியின் அனுசரணையின் கீழ் அந்தண மாணவர்களை உருவாக்கி, அந்தண சமூக மேம்பாட்டுக்கு பாடுபட்டவர் ; அரும் பணியாற்றியவர்.

வேத வாத்தியார், வைதீக வாத்தியார் மற்றும் இவரது சேவையை பாராட்டி இலங்கை அரசு இவருக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் பட்டம் கொடுத்தது.

இவரது மறைவு பெரும் இழப்பு என பாபு சர்மா தனது அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளதோடு குடும்பத்தினருக்கும் தனது அனுதாபத்தை தெரிவித்து, எல்லாம் வல்ல திருப்பதி வெங்கடேஸ்வர பெருமாள் மோட்ச லோக பிராப்த்திக்கு அருள வேண்டும். அனைத்து இந்து மக்களும் அந்தணர்களும் அவரது ஆத்ம சாந்திக்கு பிராத்திக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மயூராபதி அம்மன் ஆலயத்தில் புத்தசாசன அமைச்சர் வழிபாடு

கொழும்பு, வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீபத்ரகாளி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பெரியசாமி சுந்தரலிங்கத்தின் அழைப்பின்பேரில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி, பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் வியாழக்கிழமை மாலை ஆலயத்துக்கு வருகைதந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.



இவ்வழிபாடுகளில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பெரியசாமி சுந்தரலிங்கம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன் மற்றும் அறங்காலவர் சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



# ஈ.பி.டி.பி. வேட்பாளர் அன்சாரின் வீட்டின் மீது கோரத் தாக்குதல்

## பொலிஸார் விசாரணை

(பாறுக் ஷிஹான்)

நாடாளுமன்ற தேர்தலில் ஈபிடிபி கட்சி சார்பாக போட்டியிட்ட அஹமட் லெப்பை அன்சாரின் வீட்டின்மீதுதாக்குதல்மேற்கொண்ட விடயம் தொடர்பில் சாய்ந்தமருது பொலிஸார்புலன்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அண்மையில்நடைபெற்றுமுடிந்த 2024நாடாளுமன்ற தேர்தலில் ஈபிடிபி கட்சி சார்பாக போட்டியிட்ட வேட்பாளர் அஹமட் லெப்பை அன்சார் (வயது-45) என்பவரின் வீட்டின் மீது கடந்த 2024.11.30 இரவு கழிவு ஒயில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் கடந்த 2024.12.01 ஆந்திகதி அன்று பாதிக்கப்பட்டவரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதன் போது தாக்குதல் இடம்பெற்ற அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வொலிவேரியன் பகுதியில் அமைந்துள்ள வீட்டிற்கு சென்ற பொலிஸார் துரித விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர்.

மேலும் இச்சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட வேட்பாளர் மருதூர் அன்சார் தனக்கு அண்மைக்காலமாக இனந்தெரியாத நபர்கள் தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் செய்தனர் எனவும் பின்னர் இவ்வாறு வீட்டின் மீது மேற்கொண்ட கழிவு ஒயில் தாக்குதலில் வீட்டின் நுழைவாயில் உட்பட சுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளள எனவும் ஊடகங்களிடம் குறிப்பிட்டார்.

இது தவிர முகநூலில் சில தவறான விடயங்களை உட்செலுத்தி சில நபர்கள் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி வந்தனர் எனவும் இதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடாக தெரிவித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் ஏற்கனவே கல்முனை மாநகர சபையில் முன்னாள் உறுப்பினராக செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் சபையின் 2019 ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் நான்கில் ஒரு பெண் துஷ்பிரயோகம் மற்றும் உடலியல் ரீதியில் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களுக்குஎதிரானவன்கொடுமைகளுக்கு ஒருநாள் அல்ல எந்நாளும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்.

எமது நண்பர் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகவும், அத்துடன் எம்முடன் இணக்கமாக செயற்பட்ட கலாநிதி ஹரிணி அமரசூரிய பிரதமராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆகவே ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்குநன்றிதெரிவித்துக்கொள்கிறேன். 2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க அரசநிதி முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்கு இடைக்கால கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய 2025 ஆம் ஆண்டுவரவுசெலவுத்திட்டத்தைதயாரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது கொள்கை பிரகடனத்தில் 'சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தில் இருந்து விலகினால் பாரதூரமான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்' என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதுவேஉண்மை.இதனையேநாங்களும் ஆரம்பத்தில் இருந்து குறிப்பிட்டோம்.

சர்வதேச நாணய நிதியத்தை தவிர்த்து செயற்பட முடியாது. இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருசில நிபந்தனைகள் மீள்பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தினோம்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் மேடைகளில் ஒன்றை குறிப்பிட்டு விட்டு தற்போது நாடாளுமன்றத்துக்கு பிறிதொன்றை சமர்ப்பித்துள்ளது. 2025 ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால கணக்கறிக்கையில் கடன் சேவை 4000 பில்லியனாக எதிர்பார்க்கப்படுவதுடன், குறித்த நான்கு மாத காலப்பகுதிகளுக்கு 1600 பில்லியன் ரூபா அரச வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன்2025ஆம்ஆண்டுவரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக 4800 பில்லியன் ரூபா அரசவருமானம்எதிர்பார்க்கப்படுகிறது.தேசிய கடன் மறுசீரமைப்பினால் ஊழியர் சேமலாப நிதிய பயனாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். இவர்களின் நலன் கருதி ஆளும்தரப்பு ஏதேனும் நடவடிக்கைகளை எடுக்கும் என்று எதிர்பார்த்தோம்.

இருப்பினும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.ஆகவே அரசியல் மேடையில்குறிப்பிட்டதுஒன்று,செய்வதுபிறிதொன்று, சர்வதேசபிணைமுறியாளர்களுடன்ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதனால் இனி ஏதும்செய்ய முடியாது என்று ஆளும்தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. ஒப்பந்தம்கைச்சாத்திடப்படவில்லை. முடிந்தால் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பியுங்கள் என்று சவால் விடுக்கிறேன்.

சர்வதேச பிணைமுறிகளில் இருந்து பெற்றுக்கெண்ட 12.5 பில்லியன் டொலர் கடன்களில் பெருமளவானவை மோசடி செய்யப்பட்டது. ஆகவே ஆட்சிக்கு வந்தவுடன் கடன்களைசெலுத்த முடியாது என்று சர்வதேச பிணைமுறியாளர்களிடம் குறிப்பிடுவோம் என்று தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் குறிப்பிட்டது. நாட்டு மக்களிடம் உண்மையை சொல்லுங்கள்.

75 ஆண்டுகால அரசியலில் நாட்டுக்கு ஏதும் நன்மை கிடைக்கவில்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவர்கள் குறிப்பிடுவதை போன்று ஏதும் நடக்கவில்லை என்றால். எந்த துறையிலும் நாடு முன்னேற்றமடைந்திருக்காது. ஆளும்தரப்பு மக்களை ஏமாற்றியுள்ளது. ஏமாற்றமடைந்ததை மக்களும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றார்.

## நாடாளுமன்றத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற பெண் பணியாளர்கள் செம்மஞ்சள் நிற சேலை அணிந்திருந்தனர்.

முதலாவதாக 'பாலின அடிப்படையிலான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக ஒன்றிணைவோம்' எனும் வாசகம் தங்கிய கைப்பட்டி குழுக்களில் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர உள்ளிட்ட பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியஅங்கத்தவர்களால்சபாநாயகர்கலாநிதி அசோக ரன்வலவுக்கு அணிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் கயந்த கருணாதிலக்க ஆகியோருக்கும் இந்த கைப்பட்டி அணிவிக்கப்பட்டது. இதன்போது பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானிரோஹணதீரவும்கலந்துகொண்டார்.

அதனையடுத்து,'பாலினஅடிப்படையிலான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக ஒன்றிணைவோம்' எனும் வாசகம் தங்கிய கைப்பட்டிபிரதமர்(கலாநிதி)ஹரிணிஅமரசூரிய, சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஆளும்கட்சியின்முதற்கோலாசான்அமைச்சர் (வைத்தியகலாநிதி) நலிந்த ஜயதிஸ்ஸ, பிரதி சபாநாயகர் (வைத்தியகலாநிதி) ரிஸ்வி சாலி ஆகியோருக்கும் அணிவிக்கப்பட்டது. அத்துடன், அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த கைப்பட்டி மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையை ஒழித்தல் மற்றும் பாலின அடிப்படையிலான சமத்துவத்தை ஊக்குவிக்கும் வகையிலான பொது உறுதிமொழி அடங்கிய பத்திரமும் இங்கு வழங்கப்பட்டது.

அதனையடுத்து நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பிரதமர் (கலாநிதி) ஹரிணி அமரசூரிய குறிப்பிடுகையில், வன்முறைக்கு உள்ளாகும் பெண்கள் தொடர்பான செய்திகள் சித்திரக்கதைகள் அல்ல என்றும் , வாழ்க்கை தொடர்பான விடயங்கள் என்பதால், அவை தொடர்பான ஊடக அறிக்கையிடல்களில் கவனம் தேவை எனவும் தெரிவித்தார். பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் பெரும்பாலும் அறியாதவர்களால் அல்ல என்றும் மிகவும் நெருக்கமானவர்களால் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின்தலைவர்மற்றும்மகளிர்மற்றும் சிறுவர்அலுவல்கள்அமைச்சர்சரோஜாசாவித்ரி போல்ராஜ்குறிப்பிடுகையில்,பெண்கள்மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக 1938 எனும் இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுசெய்ய முடியும்என தெரிவித்தார். அவ்வாறான வன்முறைகள் தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். பெண்கள் மீதான கணினி ஊடாகமேற்கொள்ளும்குற்றங்கள்தொடர்பின் கடினமாக நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்துக்கு பாராளுமன்றத்தில் முன்னுதாரணமாக பணியாற்றுவது பொறுப்பானது எனவும், நாட்டில்சட்டம்இயற்றும்பொறுப்புகாணப்படும் இடமான பாராளுமன்றத்தில் பெண்களுக்கு வழங்கப்படும் அபிமானம், கௌரவம் நாட்டின் அனைத்துப் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் அபிமானம் மற்றும் கௌரவத்தைதீர்மானிக்கும்பிரதானஇடமாகும் என பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்தார்.

## மின்சாரக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சாரக் கட்டண திருத்தத்தை டிசெம்பர் 6ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு விடுத்த அறிவித்தலுக்கு அமைய, குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை விடுத்த கோரிக்கைக் கடிதத்திற்கு அமைய , 2 வார கால அவகாசம் வழங்கப்படுவதாகவும், அதற்கமைய எதிர்வரும் டிசெம்பர் 6 கட்டணத் திருத்த யோசனையைசமர்ப்பிக்குமாறு,ஆணைக்குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தவறும்பட்சத்தில் மின்சார சபைக்கு கிடைக்கும் இலாபத்திலிருந்து மின்சார பயன்பாட்டாளர்களுக்குபகிர்ந்தளிக்கப்படுமென, ஆணைக்குழுஎச்சரிக்கைவிடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நாணய நிதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச நாணய நிதிய செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. நாங்கள் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னாலேயே நாணய நிதியத்தின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க தூரம் சென்றிருந்தன.

அதில் கடன் மறுசீரமைப்புநடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவு செயற்பட்டிருந்தன. குறிப்பாக சர்வதேச பிணைமுறி தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள்செயற்படுகள்நாங்கள் அதிகாரத்துக்குவரும்போது இறுதிக்கட்டத்துக்கு வந்திருந்தது.

இந்நிலையில் குறித்த ஒப்பந்தத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதால் அதற்கான மாற்றுப் பிரேரணைகளை அவர்களுடன் கலந்துரையாடி சர்வதேச பிணைமுறியை மறுசீரமைப்புச் செய்யும் கலந்துரையாடலை நீட்டிக்க எங்களால் இயலாது. அவ்வாறு செயற்பட்டால் இந்த நடவடிக்கை மேலும் பிற்படுத்தப்படும்.

அதனால் சர்வதேச நாணய நிதியத்துடன் நாங்கள் எதிர்பார்ப்பது, நாடு என்றவகையில் நாங்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை முகாமைத்துவும் செய்துகொள்ளவதாகும். அந்தநடவடிக்கையே இதன் மூலம் தற்போது இடம்பெறுகிறது. மாறாக நீண்டகால பொருளாதார திட்டத்துக்கு எங்களிடம் வேலைத்திட்டம் இருக்கிறது. அதனை நாங்கள் மேற்கொள்வோம்.

அத்துடன் டிசெம்பர் 12 நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டி சர்வதேச பிணைமுறி பிரேரணைகளில் திருத்தங்களைச் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சி தெரிவிக்கிறது. அதனைச் செய்ய முடியாது. அதற்கு தற்போது காலம் போதாது. அதனால் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கமைய சர்வதேச பிணைமுறி நடவடிக்கையை உரிய காலப்பகுதிக்குள் முடிவுக்கு கொண்டுவருவதே எமது இலக்காகும். எமது அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட பிரகாரம் நாங்கள் முன்செல்வோம்.

எமது நீண்டகால திட்டத்துக்கு அமைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே எமது திட்டம். அதற்கு சிறிது காலம் செலலும். அதனால் தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரநெருக்கடியில்இருந்துவிரைவாக மீள உடனடி நடவடிக்கை எமக்கு தேவை. அதற்காக வெளிநாட்டு செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியுமான துறைகள் தொடர்பில்கூடிய கவனம் செலுத்தியுள்ளோம்.

அந்தவகையில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்து சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை தற்போது நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். அதேபோன்று வெளிநாட்டுதொழில் வாய்ப்புத் துறை எமக்கு அதிக வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கு இடமாகும். அந்த துறையையும் முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றார்.

## லொஹான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, பாகங்கள் ஒன்றிணைக் கப்பட்ட சந்தேகத்திற்கிடமான வாகனத்தை பயன்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த ஒக்டோபர் 30ஆம் திகதி கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஷஷி பிரபா குணவர்தன ஆகியோரைபிணையில்விடுவிக்கநுகேகொட நீதவான் திருமதி ருவினி ஜயவர்தன நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார்.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்து, அவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் முன்வைத்த பிணை கோரிக்கையை பரிசீலித்த நீதவான், ரூ. 25,000 ரொக்கம், ஒரு மில்லியன் ரூபா கொண்ட 2 சரீரப்பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

முன்னைய ஆளும்தரப்பின் பிரேரணையின் பிரகாரம் சர்வதேச பிணைமுறியாளர்களுடன் டிசெம்பர் 12 ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட இருக்கிறது.

அதற்கு முன்னதாக நாடாளுமன்றத்தை கூட்டி இந்த ஒப்பந்தத்தில் நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களை இல்லாமல் செய்யவேண்டும். நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பொன்றை எடுத்து, நாங்கள் இரண்டு தரப்பினரும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொள்வோம். அதற்கு நாங்கள் தயார்.

எமதுநாடுகானாநாட்டைப்போல்செயல்பட வேண்டும். கானாவும் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தபோது அந்த நாடு, கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் நாணய நிதியத்துடன் கலந்துரையாடி கடனை மீளச் செலுத்தும் காலத்தை நீடித்துக்கொண்டது.

ஒருநாடாக கானா சென்ற வழியில் நாமும் செல்லவேண்டும். தற்போதுள்ள இணக்கப்பாடு நிறைவேற்றப்பட்டால், பாதகமான கடன் சுழற்சியில் சிக்குண்டு அதன் பங்குதாரர்களாக மாறி, பல தசாப்தங்களாக கடன் சுமையில் தவிக்கும் நாடாக மாறுவோம்.

'வளமான நாடு; –அழகான வாழ்க்கை' என்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மாற்று கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வு மூலம் திசைகாட்டி ஆளும்தரப்பு சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டும் இணக்கப்பாட்டைதொடர்ந்துமுன்னெடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும்தரப்பு அண்மையில் நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடு, இந்த புதிய முறைமையின் மூலமா அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆளும்தரப்பு பின்பற்றிய வழிமுறைமையின்ஊடாகவாஎனகேட்கிறேன்.

வளமானநாடு;–அழகானவாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கானபயணம்தற்போதுள்ள சர்வதேசநாணயநிதியத்தின்இணக்கப்பாட்டின் அடிப்படையில் தொடருமானால் வீழ்ச்சியடையும்சர்வதேசநாணயநிதியத்தின் மார்ச் 2023 அறிக்கையில், 2033 இல் இருந்து கடன் திருப்பிச் செலுத்துதலை ஆரம்பிக்குமாறு அழைப்பு விடுத்திருந்தது.

திருத்தங்களை மேற்கொள்ளாது ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய இணக்கப்பாட்டின் மூலமும், 2028 இல் கடன் செலுத்தும் பணியையே மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

இன்னும் 4 வருடங்களில் கடனை திருப்பிச் செலுத்தும் வகையில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டமைப்பதற்கு எந்த ஆளும்தரப்பாலும் முடியாது.

இந்த இணக்கப்பாட்டின் மூலம் நாட்டை ஆபத்தில் ஆழ்தியுள்ளனர். தற்போதைய ஆளும்தரப்பும் ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதியின் அடிச்சுவடுகளையே பின்பற்றி வருகின்றனர்.

ஆளும்தரப்பு நாணய நிதியத்தின் அறிக்கைகளை ஆராயாமல், நீட்டிக்கப்பட்ட கடன் வசதிகளைப் பெறுவதற்காக மட்டுமே செயல்படுவது ஆபத்தான சூழ்நிலையாகும். தற்போதுள்ள இணக்கப்பாடு பலவீனமானது, இதற்கு அப்பால் சென்று, திருத்தங்களை மேற்கொண்டு புதிய இணக்கப்பாட்டை எட்ட வேண்டும். அதற்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்க தயாராக இருக்கிறோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தொழிற்சங்கங்களை நசுக்குவது ஆளும்தரப்பின் கொள்கையல்ல

## சுகாதாரத்துறை அமைச்சர் விளக்கம்

தொழில்சார் உரிமைகளை முடக்குவது அல்லது தொழிற்சங்கங்களை நசுக்குவது புதிய ஆளும்தரப்பின் கொள்கை அல்ல. அனைத்து தொழில்களின் தொழில் கௌரவத்தை பாதுகாத்து தொழிற்சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளை முடிந்தவரை நிறைவேற்றுவதற்கு ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் சுகாதார சேவையில் உள்ள தொழிற்சங்கங்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் தொடர்பில் சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த கலந்துரையாடலின் போது சுகாதார துறையில் கடமையாற்றும் ஊழியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் பிரச்சினைகள் , சுகாதார சேவையின் முன்னேற்றத்திற்கான தொழிற்சங்கங்களின் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் பங்களிப்பு ஆகியவை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதில் அரச வைத்தியர் சங்கங்கள், தாதியர் சங்கங்கள், நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர்கள் ஒன்றியம் உள்ளிட்ட சுகாதாரத்துறையில் உள்ள பல முக்கிய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மேற்படி தொடர் விசேட கலந்துரையாடலில் கலந்துக் கொண்டுள்ளனர்.

இதன் போது சுகாதார அமைச்சர் தெரிவித்ததாவது:

தொழிற்சங்கப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட பெரும்பாலான பிரச்சினைகள் மற்றும் முன்மொழிவுகள் மிகவும் நியாயமானவை. குறித்த பிரச்சினைகளுக்கு முறையான நியாயமான தீர்வுகளை வெகு விரைவில் வழங்குவேன் .

சுகாதார சேவையில் பணியாற்றும் விசேட வைத்திய நிபுணர்கள் முதல் அடிமட்ட ஊழியர்கள் வரையான அனைவரும் சேவைக்கு அப்பாற்பட்ட மனிதாபிமானப் பணியை மேற்கொள்கின்றனர். அச்சேவையின் காரணமாகவே இலங்கையின் சுகாதாரத்துறை எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடிந்துள்ளது.

இலங்கை மக்களுக்கு தரமான மற்றும் உகந்த சுகாதார சேவையை வழங்க எமது ஆளும்தரப்பு எதிர்பார்க்கிறது. தொழிற்சங்கங்களின் ஆதரவு அத்தியாவசியமானது. தற்போதைய தொழில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது மாத்திரமன்றி சுகாதார அமைச்சுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான உறவு, நல்லிணக்கம் மற்றும் நட்புறவை வளர்ப்பது போன்ற நோக்கங்களும் இவ்வாறான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு முக்கிய காரணம்.

தொழில்சார் உரிமைகளை முடக்குவது அல்லது தொழிற்சங்கங்களை நசுக்குவது புதிய அரசாங்கத்தின் கொள்கை அல்ல அனைத்து தொழில்களின் தொழில் கௌரவத்தை பாதுகாத்து தொழிற்சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளை முடிந்தவரை நிறைவேற்றுவதற்கு எமது ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்றார்.

### பொதுத் தேர்தல் செலவுகள்:

# இன்று நள்ளிரவுக்குள் கணக்கறிக்கை தேவை

## இல்லையேல் சட்ட நடவடிக்கை

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் தமது வருமானம் மற்றும் செலவு பற்றிய அறிக்கையை இன்று சனிக்கிழமை (07) நள்ளிரவுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறில்லை எனில் தண்டனை சட்டக் கோவையின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கமைய வழக்கு தாக்கல் செய்யப்பட்டால் இவர்களால் அடுத்துவரும் தேர்தல்களில் போட்டியிட முடியாத நிலைமை ஏற்படலாம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்றையத்தினம் ஊடகங்களுக்க அறிவிப்பொன்றை வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் வருமானம் மற்றும் செலவு பற்றி அறிக்கை கோரப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் தேர்தலில் போட்டியிட்ட சுமார் 8361 வேட்பாளர்களில் 1985 பேர் மாத்திரமே அவற்றை ஒப்படைத்துள்ளனர்.

அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் சார்பில் 690 குழுக்களின் சார்பில் 106 பேர் மாத்திரமே அவற்றை ஒப்படைத்துள்ளனர்.

அதேபோன்று தேசிய பட்டியிலிருந்த 527 பேரில் 57 பேர் மாத்திரமே சமர்ப்பித்துள்ளனர். இதற்காக வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது. அதனை நீடிக்க முடியாது.

எனவே கால அவகாசம் நிறைவடைவதற்குள் அவற்றை சமர்ப்பிக்குமாறு சகல வேட்பாளர்களிடமும் கேட்டுக் கொள்கின்றோம்.மாறாக வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காதவர்களுக்கு எதிராக தண்டனை சட்டக் கோவையின் கீழ் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்ட தேர்தல் செயலகங்களில் அவற்றை கையளிக்க முடியும் என்பதோடு, பதிவு தபாலிலும் அனுப்பி வைக்க முடியும். பாராளுமன்றத்துக்கு தெரிவானர்கள் மாத்திரமின்றி, வேட்புமனு தாக்கல் செய்த அனைவரும் இதனை சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

இதனுடன் தொடர்புபடுத்தி ஏதேனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டால், குறித்த வேட்பாளருக்கு உத்தேச உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலோ அல்லது மாகாணசபைத் தேர்தலிலோ போட்டியிட முடியாமல் போவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. உயர்தர பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர், நீதிமன்ற நடவடிக்கையைத் தொடர்ந்து தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# தொடருந்து முன்பதிவு மோசடியை தடுப்பதற்கு திணைக்களம் முயற்சி

தொடருந்து இருக்கைளை முன்பதிவு செய்வதில் கூடுதலான கோரிக்கை இருப்பதால், இணையவழி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் இந்த அனுமதியை சில மோசடிக்காரர்கள் பெற்று ரயில் பயணிகளுக்கு கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனால், முன்பதிவு அனுமதிப்பத்திரத்தில் அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்படாமலிருந்தால் குறித்த பய ணத்திற்கான கட்டணத்துடன் இரண்டு மடங்கு தொகை தண்டப்பணமாக அறிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ரயில்வே திணைக்கள மேலதிக பொது முகாமையாளர் வி.எஸ்.பொல்வத்தகே தெரிவித்துள்ளார்.

முன்பதிவு பயண சீட்டுக்களை பெற்றுக்கொள்ளும் போது ,சம்பந்தப்பட்ட நபரின் கடவுச்சீட்டை அல்லது சம்பந்தப்பட்ட நபரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து அது தொடர்பான எண்களை பதிவு செய்துக்கொள்ள வேண்டும் என்று பொது முகாமையாளர் ரயில் பயணிகளை அறிவுறுத்தியுள்ளார்.

திணைக்கள சட்ட விதிகளுக்கு அமைவாக ரயில் பயணத்தில் ஈடுபடுவோர் தவிர்ந்த வேறு ஒருவர், குறிப்பிட்ட முன் பதிவு பயணச் சீட்டுக்களை பயன்படுத்த முடியாது என்றும் ரயில்வே திணைக்கள மேலதிக பொது முகாமையாளர் குறிப்பிட்டார். இவ்வாறான மோசடிகளை தடுக்கும் வகையில் தற்போது ரயில் பயணத்தின் போது 60 சதவீதமான பயணச்சீட்டுக்கள் இணையவழி மூலமான முன்பதிவு ஆசன பயணச்சீட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

40 சதவீதம் ரயில் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக ரயில்வே வணிகவியல் பிரதி பொது முகாமையாளர் ரஞ்சித் பத்மலால் தெரிவித்தார். இனிமேல், இணையவழி முறை மூலம் ஒருவருக்கு ஐந்து பயணச்சீட்டுக்கள் மட்டுமே வழங்கப்படும் என்றும் பயணச்சீட்டுக்களை வாங்குபவரின் அடையாள அட்டை எண் அல்லது கடவுச்சீட்டிலுள்ள எண் உள்ளதா என பயணியிடம் கேட்கப்படும். அவ்வாறு இல்லாதாபட்சத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# தேசியவாதிகளை இனவாதிகள் என சித்தரிக்கக்கூடாது – திலித் ஜயவீர

தேசியவாதிகளை இனவாதிகள் என சித்தரிக்கக்கூடாது என்று சர்வ ஜன அதிகாரம் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுவோம். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கொள்கை பிரகடனத்தில் பல சிறந்த திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி 75 ஆண்டுகால அரசியலை சாபம் என்று விமர்சித்தது. பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளதுடன், பல பொய்களையும் குறிப்பிட்டுள்ளது என்பதையும் வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும். வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்ற வேண்டும் இல்லையேல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு ஏற்பட்ட கதியே ஏற்படும்.

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்தில் முறையான கோட்பாடு மற்றும் இலக்கு குறிப்பிடப்படவில்லை. சிறந்த திட்டங்கள் ஏதும் இல்லாவிடின் கடந்த காலங்களைப் போன்றே இந்தக் கொள்கைப் பிரகடனமும் பாரம்பரியமானதாகவே கருதப்படும்.

இனவாதத்தை முழுமையாக இல்லாதொழிப்பதாக ஆளும்தரப்பு குறிப்பிடுகிறது. இனவாதத்துக்கு எதிராகவே நாங்கள் செயற்படுகிறோம். தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுபவர்களை இனவாதிகள் என்று சித்தரிக்கக்கூடாது. தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயற்பட்டதால்தான் அமெரிக்கர்கள் டொனால்ட் ட்ரம்பை மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளார்கள்.

தேசியத்தை இனவாதம் என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது.தேசியத்தை சிறந்த முறையில் அடையாளப்படுத்திக் கொண்டு செயற்படாவிடின் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியாது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதியின் உரையை வரவேற்கிறேன் அதை உடனே நடைமுறைப்படுத்துங்கள்

## 10ஆவது நாடாளுமன்ற கன்னி உரையில் குகதாசன் எம்.பி.

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து என்னை இந்த நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்பிய வாக்காளர் பெரு மக்களுக்கு முதலில் என் நன்றியை தெரிவித்துக்கொண்டு , நீண்ட காலம் திருகோணமலை மாவட்டத்தினை பிரதிநிதித்துவப் படுத்திய மறைந்த தலைவர் இரா.சம்பந்தன் ஐயா அவர்களை நினைவு கூர்ந்தவனாக 10 ஆவது நாடாளுமன்றத்தில் எனது முதலாவது உரையை ஆற்ற விழைகின்றேன்.

எனது உரையில் மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் அனுரகுமார திசாநாயக்க அவர்கள் பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரை தொடங்கி வைத்து ஆற்றிய கொள்கை விளக்க உரை தொடர்பாகவும், அண்மையில் நிலவிய காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட பேரிடர்கள் தொடர்பாகவும் கருத்துரைக்க விரும்புகின்றேன்.

மேன்மை தங்கிய குடியரசுத் தலைவர் தனது உரையில் ஊழலற்ற, இனவாதமற்ற, மதவாதமற்ற மற்றும் வெளிப்படைத்தன்மையான ஓர் ஆட்சியை நடத்த உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இது வரவேற்கத்தக்க கூற்றாகும். இதற்கு முன்பு கடந்த 70 ஆண்டுகளாக ஆட்சி செய்தவர்கள் மேற்கொண்ட ஊழல், இனவாதம், மதவாதம் மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற ஆட்சி முறை ஆகியன இந்த நாடு இன்றைய இக்கட்டான சூழ்நிலையை அடைய முதன்மையான காரணி என்பது அனைவரும் அறிந்த விடயம்.

எனவே குடியரசுத் தலைவர் கூறியவாறு ஊழலற்ற, இனவாதம் அற்ற, மதவாதம் அற்ற மற்றும் வெளிப்படைத்தன்மை முதலியவற்றைக் கொண்ட ஆட்சியை சொல்லில் மட்டுமின்றி இந்த அரசு செயலிலும் காட்ட வேண்டும்.

**“ சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல் ”**

என்ற வள்ளுவர் வாக்கினை நினைவில் கொண்டவர்களாக இந்த ஆட்சியாளர்கள் செயற்படுவார்கள் என நம்புகின்றேன் . மேலும் குடியரசுத் தலைவர் தனது உரையில் அரச சேவையை வினைத்திறன் உள்ளதாக ஆக்கப் போவதாகவும் சட்ட ஆட்சியை நிலைநாட்டப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசசேவையினை உலகத்தரத்திற்கு உயர்த்தினால் தான் இந்த நாட்டை முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்ல முடியும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது 139 குடிமக்களுக்கு ஓர் அரச ஊழியர் இருந்தார், இன்று 13 பேருக்கு ஓர் அரசு ஊழியர் காணப்படுகின்றார் என கூறப்படுகின்றது.

எனவேதான் அரச சேவையை ஒழுங்குபடுத்தி மீளமைக்க வேண்டும்.

அடுத்து அவர் பேசுகையில் பொதுச்சொத்துக்களை களவாடியவர்களை,மோசடி செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்குவுள்ளதாக கூறியுள்ளார்.

இதற்கு முன்னர் வந்த அரசுகளும் தேர்தல் காலங்களில் இவ்வாறு கூறின. ஆட்சிக்கு வந்த பின்பு எதுவும் நடக்கவில்லை. யாரும் தண்டிக்கப்படவும் இல்லை. ஆனால் இந்த அரசு கூறியதனை கூறியவாறு செய்யும் என நம்புகின்றேன். அத்தோடு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்படுவது மட்டும் அன்றி அவர்கள் மோசடி செய்ததாக கூறப்படும் பணத்தினையும் வளத்தினையும் மீளப் பெற வேண்டும்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இயம்பியுள்ளார்.

வேளாண்மைதுறை, கடற்தொழில் துறை மற்றும் கைத்தொழில் துறை முதலியவற்றில் இந்த நாடு நீண்ட தூரம் வளர்ச்சி காண வேண்டியுள்ளது.




இத்துறைகள் வளர்ச்சி கண்டால் மாத்திரம் போதாது அபிவிருத்தியும் அடைய வேண்டும்.

பொருளியலில் வளர்ச்சியும் , அபிவிருத்தியும் வெளவேறானவை. வளர்ச்சி என்பது ஒரு மரம் செங்குத்தாக வளர்வது போன்றது. அபிவிருத்தி என்பது அந்த மரம் பல்வேறு கிளைகளை பரப்பி வளர்வது போன்றது.

அதனைப் போன்று கமத்தொழில், கடற்தொழில்,கால்நடை வளர்ப்பு மற்றும் கைத்தொழில் துறைகளும் பல்வேறு கிளைகளை விட்டு அபிவிருத்தி காண வேண்டும், அத்தோடு மக்களிடையே வருமானப் பங்கீடும் நியாயமானதாக அமைய வேண்டும்.

ஒரு காலத்தில் பொலிவியா நாட்டில் அந்த அரசின் அயராத முயற்சியால் நாட்டின் பொருளாதாரம் 20 வீதத்தால் உயர்ந்தது . இந்த வளர்ச்சிக்கு முன்பு பொலிவியா நாட்டில் 60 வீதமான வருமானத்தினை 40 வீதமான மக்களும் 40 வீதமான வருமானத்தினை 60 வீதமான மக்களும் வைத்திருந்தனர்.

ஆனால் வளர்ச்சிக்குப் பின்பு பார்த்தபோது 80 வீதமான வருமானத்தினை 20 வீதமான மக்களும் 20 வீதமான வருமானத்தினை 80 வீதமான மக்களும் வைத்திருந்தனர். இது ஒரு பொருளாதார அபிவிருத்தி அல்ல. எனவே தான் இந்த அரசு பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியில் மட்டுமன்றி வருமான பங்கீட்டிலும் கவனம் செலுத்த வேண்டும் என விரும்புகின்றேன்.

அதேபோன்று வேளாண்மை துறை,கடற்தொழில்துறை மற்றும் கால்நடை வளர்ப்பு துறை ஆகியவற்றில் மேம்பாடு அடைய வேண்டுமாயின் இத்துறைகளுக்கு எனதனித்தனியான சிறப்பு பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டும். எமக்கு அயலில் உள்ள இந்திய மாநிலமான தமிழ்நாட்டில் உள்ள கோயம்பத்தூர் வேளாண்மை பல்கலைக்கழகம் விவசாயத்துறை மேம்பாட்டிற்கு ஆற்றிவரும் பணி அளப்பரியது என்பதனை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோன்ற பல்கலைக்கழகங்கள் இந்த நாட்டிலும் உருவாக்கப்பட வேண்டும்.

அதேபோல கணனி தொழில்நுட்பத் துறை மேம்பாட்டுக்கு தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அண்ணா பல்கலைக்கழகமும், ஐஐடி என்று அழைக்கப்படுகின்ற இந்திய தொழில்நுட்ப நிறுவனமும் ஆற்றி வரும் பணிகளையும் நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

இங்கு கல்வி கற்றவர்கள் அந்த நாட்டிற்கு கொண்டு வருகின்ற அந்நிய நாணய மாற்றின் அளவையும் , பொருளாதார மேம்பாட்டுக்கு அவர்கள் அளிக்கும் பங்களிப்பையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து குடியரசு தலைவர் உரையாற்றுகையில் -

கல்வித்துறை மேம்பாடு குறித்தும் குறிப்பிட்டு இருந்தார். கல்வித்துறையினை மேம்படுத்த வேண்டுமாயின் கற்றல் கற்பித்தல் முறைகளில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய தேவை உள்ளதுடன் ஆசிரியர் பணிக்கு ஆட்சேர்க்கும் முறையிலும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் 166 தொடக்க கல்வி ஆசிரியர் பற்றாக்குறையும் 116 கணித ஆசிரியர் பற்றாக்குறையும் 53 ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் 52 கணினி ஆசிரியர் பற்றாக்குறையும் 60 அறிவியல் ஆசிரியர் பற்றாக்குறையும் 53 தமிழ் ஆசிரியர் பற்றாக்குறையும் என ஆக மொத்தம் 500 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இதனால் மாணவர்களது கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு போதிய ஆசிரிய ஆளணியை மாவட்டத்திற்கு ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இப்பொழுது உள்ள முறையில் ஆசிரியர் வளப்பங்கீடு சரியான முறையில் அமையவில்லை. ஆசிரியர் நியமனத்தின் பொழுது பெரும்பாலான ஆசிரியர்கள் திருகோணமலைக்கு வருகின்றார்கள், வந்து சில காலங்களில் தத்தமது மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொண்டு சென்று விடுகின்றார்கள்.

இந்த சிக்கலை தீர்ப்பதற்கு கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி வழங்கும் பொழுது பிரதேச செயலாளர் மட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்தால் இந்த சிக்கலை தீர்க்கலாம்.

உள்நாட்டு அமைச்சு கிராம அலுவலர்களை நியமிக்கும் பொழுது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளரின் பிரிவுகளில் உள்ளவர்களையே நியமிக்கின்றது. இதே முறையை கல்வி அமைச்சும் பின்பற்றினால் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு காணலாம்.

மேலும் கல்வித்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. கல்வித்துறைக்கு 2023 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் 1.3 வீதமான நிதியும் 2024இல் 1.5 வீதமான நிதியுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைக் குறைந்தது 5 வீதமாக ஆவது உயர்த்த வேண்டும்.

# ஜனாதிபதியின் உரையை வரவேற்கிறேன் அதை உடனே நடைமுறைப்படுத்துங்கள்

முன்பக்கத் தொடர்ச்சி.....

மேற்குலக நாடுகள் தமது வரவு செலவுத்திட்டத்தில் 5 வீதத்துக்கும் கூடுதலான தொகையினை கல்விக்கு ஒதுக்குகின்றன என்பதனையும் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

மேலும் குடியரசுத் தலைவர் தனது விளக்க உரையில் கப்பல் போக்குவரத்து துறையினை மேம்படுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார். திருகோணமலையில் உள்ள இயற்கைதுறைமுகமானது இந்துமா கடலில் போக்குவரத்து செய்கின்ற கடற்கலங்களுக்கு எரிபொருள் நிரப்பக்கூடிய ஒரு நடுவத்தில் அமைந்துள்ளது.

இந்த துறைமுகத்தினை விருத்தி செய்து அயலில் உள்ள எண்ணெய்க் குதங்களையும் மறுசீரமைப்பு செய்தால் பெருமளவான அந்நிய நாணய மாற்றினை ஈட்ட முடியும் என்பதோடு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வேலையற்ற இளையோருக்கு வேலைவாய்ப்பும் வழங்க முடியும். இதற்கு துறைமுகத்தினை மேம்படுத்துவதோடு இடையீடு இன்றி மின் வழங்கவும் ஆவன செய்ய வேண்டும்.

மேலும் குடியரசுத் தலைவர் தனது உரையில் சுகாதார மேம்பாடு பற்றி குறிப்பிட்டுள்ளார். இந்த இடத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் மாவட்ட மருத்துவமனையில் 54 மருத்துவர் பற்றாக்குறையும் 9 துறை சார் மருத்துவ நிபுணர் பற்றாக்குறையும் 7 செவிலியர் பற்றாக்குறையும் 3 மருந்தாளர் பற்றாக்குறையும் 39 சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையும் 3 சாரதிகள் பற்றாக்குறையும் காணப்படுகின்றது.

மேலும் மாகாண அரசின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் 40 துறைசார் மருத்துவ நிபுணர் பற்றாக்குறையும் 21 மருத்துவர் பற்றாக்குறையும் 27 செவிலியர் பற்றாக்குறையும் 22 மருந்தாளர் பற்றாக்குறையும் 06 மிகை ஒலி ஊடுகதிர் தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறையும் 100 சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையும் காணப்படுகின்றது.

இந்த வெற்றிடங்களை நிரப்ப ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் மத்திய அரசின் கீழ் உள்ள திருகோணமலை மாவட்ட மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவானது ஒரு பகுதி கட்டப்பட்ட நிலையில் குறையாக காணப்படுகின்றது.

இப்பிரிவில் அதிகளவில் நோயாளிகள் அனுமதிக்கப்படுவதனால் நோயாளிகளை நிருவகிக்க போதிய இடவசதி இல்லாத நிலை உள்ளது. இக்கட்டிடத்தை கட்டி முடிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தொடர்ந்தும் குடியரசுத் தலைவர் தனது கொள்கை விளக்க உரையில் ‘ கிளீன் ஸ்ரீலங்கா’ பற்றியும் குறிப்பிட்டுள்ளார். திருகோணமலை மாவட்டமானது 90 கிலோ மீற்றர் நீளமான சுற்றுலாப் பயணிகளை கவரும் கடற்கரையைக் கொண்டுள்ளது, எனினும் இந்த கடற்கரைகள் போதுமான தூய்மையினை கொண்டவையாக காணப்படவில்லை.

போத்தல்,பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகள் கரை ஒதுங்கும் இடங்களாக காணப்படுகின்றன. இதனை மாற்றியமைக்க ஆவன செய்யப்பட வேண்டும்.

முன்னுரைத்தவாறு அவர் பல்வேறு விடயங்கள் பற்றி குறிப்பிட்டிருந்தாலும் , நீண்ட காலமாக இந்த நாட்டில் புரையோடிப் போய் உள்ள இனச்சிக்கலுக்கு தீர்வு காணும் பொருட்டான முன்மொழிவுகள் எதனையும் அவர் முன் வைக்கவில்லை என்பது கவலை தோய்ந்த செய்தியாகும்.

**‘ சொல்லாமலே செய்வர் பெரியார் ’**

என்னும் முதுமொழிக்கு அமைய மேன்மை தங்கிய குடியரசு தலைவர் அனுரகுமார திசாநாயக்க அவர்கள் இச்சிக்கலுக்கு ஒரு நிலையான தீர்வினை காண்பார் என்ற நம்பிக்கையோடு குடியரசு தலைவர் அவர்களின் 10 ஆவது கொள்கை விளக்க உரை மீதான கருத்துரையினை நிறுத்திக் கொண்டு, அண்மையில் இந்த நாட்டில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட இழப்புகள் பற்றி இந்த உயரிய சபையின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் முழுமையான அளவில் 23,463 ஏக்கர் நெற்செய்கையும் பகுதி அளவில் 10,525 ஏக்கர் நெற்செய்கையும் சேதமடைந்துள்ளன. இதனால் 12,994 விவசாய குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இம் மாவட்டத்தில் 10 குளங்கள் முழுமையாகவும் 18 குளங்கள் பகுதியளவிலும் உடைப்பெடுத்துள்ளன.

அதேபோன்று மாவட்டத்தின் கடற்கரை பிரதேசத்தினை அண்டி வாழ்கின்ற மீனவர்கள் கடந்த 10 நாள்களாக கடலுக்கு செல்லாத காரணத்தால் 23,178 மீனவ குடும்பங்கள் வாழ்வாதாரத்திற்கான வருமானத்தினை இழந்து இன்னல் உறுகின்றனர். மேலும் வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்த காரணத்தால் 4250 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட அனைத்து தரப்பினருக்கும் இடருதவிகள் வழங்க ஆவன செய்ய வேண்டும் என வேண்டிக் கொண்டு உரையினை நிறைவு செய்கின்றேன். - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.12.2024இல் வெளியிடப்பெற்றது